# Press Releases 2025

**29-12-2025**



### அழகப்பா பல்கலையில்

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

## துணைவேந்தர் ஜி.ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை மற்றும் தமிழ்நாடு அரசின் உயிரி தொழில் நுட்ப பூங்காவுடன் துணைவேந்தர் ஜி.ரவி தலைமையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**காரைக்குடி, டிச.29:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் நடந்த 3வது சர்வதேச கருத்தரங்கத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசின் உயிரி தொழில்நுட்ப பூங்கா உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிகழ்ச்சி நடந்தது. துறை தலைவர் முனைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். துணைவேந்தர் மூத்த பேராசிரியர் முனைவர் ஜி.ரவி தலைமை வகித்து பேசுகையில், ஆராய்ச்சி முடிவுகளை பொருளாதார மதிப்புமிக்கதாக மாற்றுவதே இந்த மையத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது. சென்னையில் நிறுவப்பட்ட உயிரி தொழில் நுட்ப பூங்காவின் வெற்றிகரமாக செயல்பாட்டை தொடர்ந்து கோவையிலும் துவங்கப்பட்டுள்ளது.

அரசின் உயரிய முயற்சியால் 13 புதிய தொழில் நிறுவனங்கள் டிஐசிஇல் எல் நிறுவனத்தில் துவங்கப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக் கழகத்தை பொறுத்தவரை ஆராய்ச்சிக்கு மிகவும் முக்கியத்தும் அளித்து வருகிறோம். இப்பல்கலைக் கழகத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளது. அக்கட்டுரைகளை ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். ஆராய்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக ரூ.10 கோடி வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது என்றார். இதில் டிஐசிஇஎல் பயோ பார்க் மேலாண்மை இயக்குநர் பூங்குமரன், ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**18-12-2025**

தினகரன்

4/4

### அழகப்பா பல்கலையில்

# சமூக மேம்பாட்டிற்கு பல்வேறு ஆராய்ச்சிகள்

## துணைவேந்தர் ஜி.ரவி பெருமிதம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி தகவலியல் துறை சார்பில் நடந்த சர்வதேச கருத்தரங்கில் விழா மலரை துணை வேந்தர் ஜி.ரவி வெளியிட, மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் கிருஷ்ணன் பெற்றுக்கொண்டார்.

**காரைக்குடி, டிச.18:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் உயிரி தகவலியல் கட்டமைப்பு மற்றும் கணினி சார்பு மருந்து கண்டறிதலின் நவீன உத்திகள், வளர்ச்சிகள் குறித்து 3வது சர்வதேச கருத்தரங்கத்தின் துவக்க விழா நடந்தது. கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர், உயிரி தகவலியல் துறை தலைவர் மூத்த பேராசிரியர் முனைவர் ஜெயகாந்தன் வரவேற்றார்.

திருவாரூர் மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். துணை வேந்தர் பேராசிரியர் முனைவர் ஜி.ரவி தலைமை வகித்து பேசுகையில், பல்கலைக்கழகத்தில் உள்ள துறைகளில் சிறந்த துறையாக உயிரி தகவலியல் துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. கோவிட் 19 தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளது. அக்கட்டுரைகளை ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். ஆராய்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக ரூ.10 கோடி வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து விதமாக ஆய்வுக உபகரணங்களும் உள்ளன. தவிர ரூ.5 கோடியில் ஆய்வு கூடங்களுக்கு தேவையான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இதுபோன்ற சர்வதேச கருத்தரங்குகள் மூலம் மாணவர்கள் தங்களின் அறிவை வளர்த்துக்கொள்ளலாம். தவிர சர்வதேச விஞ்ஞானிகளிடம் கலந்துரையாட வாய்ப்புகள் அமையும். பல்கலைக்கழகத்தில் உள்ள 45 துறைகளிலும் சமூகத்திற்கு தேவையான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். சமூக வளர்ச்சிக்கு தேவையான ஆராய்ச்சிகளே அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. தவிர புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்பாட்டுக்கு கொண்டு வர ஹைட்ரஜன் எனர்ஜி தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் செயலாளர் பேராசிரியர் வேல்முருகன், சீனா தைவான் ஒத்திசைவு கதிர்வீச்சு ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் சன்ஜங் சென், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக உயிரி அறிவியல் மையத்தின் நிர்வாக இயக்குநர் பூங்குமரன், ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் சஞ்சீவ்குமார் சிங் நன்றி கூறினார்.

**17-12-2025**

# அழகப்பா பல்கலை.யில் சர்வதேச மாநாடு



அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற சர்வதேச மாநாடு தொடக்க விழாவில் மாநாட்டு மலரை துணைவேந்தர் க. ரவி வெளியிட, அதைப் பெற்றுக்கொண்ட திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆ. கிருஷ்ணன். உடன் அழகப்பா பல்கலைக்கழக உயிரித் தகவலியல் துறைத் தலைவர் ஜெ. ஜெயகாந்தன் உள்ளிட்டோர்.

**காரைக்குடி, டிச. 17:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரித் தகவலியல் கட்டமைப்பு, கணினி சார்பு மருந்து கண்டறிதலின் நவீன உத்திகள், வளர்ச்சிகள் என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு தொடக்க விழா புதன் கிழமை நடைபெற்றது.

பல்கலைக்கழக உயிரித் தகவலியல் துறை சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் க. ரவி தலைமை வகித்து, மாநாட்டு மலரை வெளியிட்டுப் பேசியதாவது:

பல்கலைக்கழகங்கள் தங்களது பாரம்பரிய துறைகளோடு புதிய ஆராய்ச்சி, பயன்பாட்டின் எல்லைகளை விரிவுபடுத்த வேண்டும். செயற்கை நுண்ணறிவு, உயிரித் தகவல் தொழில்நுட்பத் துறைகள் சுகாதாரம், மருந்து ஆராய்ச்சியில் பெரும் மாற்றத்தை உருவாக்கியுள்ளன. இளம் ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆராய்ச்சியை சமூகத் தாக்கத்துடன் ஒன்றிணைத்து 'மேட் இன் இந்தியா' என்ற நோக்குடன் மேற்கொள்வதற்கு உள்ளூர் தொழில்நுட்ப வளர்ச்சியும், கூட்டுத் திட்டங்களும் பெற்றிருப்பது அவசியம் என்றார் அவர்.

விழாவில் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆ.கிருஷ்ணன் மாநாட்டு மலரைப் பெற்றுக்கொண்டு தொடக்க உரையாற்றினார். தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் செயலர் டி.வேல்முருகன் சிறப்புரையாற்றினார். சீனா-தைவான் தேசிய ஒத்திசைவு கதிர் வீச்சு ஆராய்ச்சி மையப் பேராசிரியர் ஜங் சென், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் நிறுவப்பட்ட உயிரி அறிவியல் மையத்தின் இயக்குர் பி. பூங்குமரன், அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் சி.சேகர் ஆகியோரும் பேசினர்.

முன்னதாக, பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறைத் தலைவரும், மாநாட்டின் ஒருங்கிணைப்பாளருமான ஜெ. ஜெயகாந்தன் வரவேற்றுப்பேசினார். சென்னையில் உள்ள தமிழ்நாடு தொழில் துறை உயிரி தொழில்நுட்பப் பூங்காவுடன் அழகப்பா பல்கலைக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

**23-11-2025**

தினகரன் 3/4

தற்போது மழைக்காலம் ... னர்.

### க்யூ.எஸ் தரவரிசைப்பட்டியலில்

# தமிழ்நாடு அளவில் அழகப்பா பல்கலைக்கு இரண்டாம் இடம்

## துணைவேந்தர் தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் க்யூ.எஸ் தரவரிசை மற்றும் டைம்ஸ் தரவரிசையில் சிறப்பிடம் பெற்றதற்கான சான்றை துணைவேந்தர் ஜி.ரவியிடம், மூத்த பேராசிரியர் ஜெயகாந்தன் வழங்கினார்.

**காரைக்குடி, நவ. 23:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் க்யூ.எஸ் தரவரிசைப்பட்டியலில் இந்திய அளவில் 49வது இடமும், தமிழ்நாடு அளவில் 2வது இடத்தையும் பெற்றுள்ளது என துணைவேந்தர் முனைவர் ஜி.ரவி தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், "க்யூ.எஸ் நிறுவனத்தால் தரவரிசைக்காக கற்பித்தல் அண்டு வேலைவாய்ப்பில் பல்கலைக்கழகத்தின் பொதுமதிப்பு, முனைவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் சர்வதேச மாணவர்களின் சராசரி ஆகியவை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது.

அதேபோல் டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் தரவரிசைக்காக, கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமானம் ஆகிய 5 குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. இத்தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக அழகப்பா பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் மூத்த பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் பல்கலைக்கழகத்தின் 2025ம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து, சரியாகப் பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்து இருந்தார்.

க்யூ.எஸ் தரவரிசைப் பட்டியலுக்கு 2025ம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 1529க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான பல்கலைக்கழகங்கள் கலந்து கொண்டன. இதில் கடந்த 4ம்தேதி வெளியிடப்பட்ட ஆசியப் பல்கலைக்கழக அளவிலான தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 369வது இடத்தை பெற்றுள்ளது. தெற்கு ஆசிய அளவில் 93வது இடத்தையும், இந்தியாவில் இருந்து கலந்து கொண்ட 294 உயர்கல்வி நிறுவனங்களில் 49வது இடத்தையும், தமிழ்நாடு அளவில் 2வது இடத்தை பெற்றுள்ளது. இந்த ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட க்யூ.எஸ் நிலைத்தன்மை தரவரிசையில் 1501வது இடத்தை பெற்றுள்ளது.

அதேபோல் கடந்த 21ம் தேதி டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பன்முக அறிவியல் தரவரிசைப்பட்டியில் இப் பல்கலைக்கழகம் 251 & 300வது பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்திய அளவில் 16வது இடத்தையும், தமிழ்நாடு அளவில் 2ம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம் பெறசெய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை பாராட்டுகிறேன்" என்றார். பதிவாளர் பேராசிரியர் செந்தில்ராஜன் உள்பட பலர் இருந்தனர்.

**15-10-2025**



## டைம்ஸ் தரவரிசைப் பட்டியலில்

# அழகப்பா பல்கலை., மாநிலஅளவில் 2ம் இடம்

### துணைவேந்தர் ஜி.ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் டைம்ஸ் தரவரிசையில் இடம் பெற்றதற்கான சான்றை துணைவேந்தர் ஜி.ரவியிடம், தரவரிசைப்பிரிவின் தலைவர் ஜெ.ஜெயகாந்தன் வழங்கினார்.

**காரைக்குடி, அக். 15:** டைம்ஸ் உயர்கல்வி நிறுவத்தால் வெளியிடப்பட்டுள்ள உலக பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் 801, 1000வது பிரிவிலும், தமிழ்நாடு அளவில் 2வது இடத்தை பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் உலக பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 115 நாடுகளை சேர்ந்த 3500க்கும் மேற்பட்ட உலகளாவிய கல்வி நிறுவனங்கள் தரவுகளை சமர்ப்பித்து இருந்தன. இத்தரவரிசைக்காக கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமானம் ஆகிய 5 குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தியுள்ளது. இத்தரவரிசையில் கலந்துகொள்ள அழகப்பா பல்கலைக்கழக தரவரிசைப்பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக்கழகத்தின் 2022-2023ம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து, சரியாக பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்தனர். 3118 பல்கலைக்கழங்கள் தரவரிசையில் இடம் பெற்றுள்ளன. இம் மாதம் வெளியிடப்பட்ட தரவரிசை பட்டியல் 2026ன் படி அழகப்பா பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழக 801, 1000வது பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் இருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு அளவில் 2ம் இடத்தை பெற்றுள்ளது. இந்த உயரிய தரவரிசையில் பல்கலைக்கழகத்தை இடம்பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை பாராட்டுகிறோம், என்றார்.

**12-10-2025**



# மாநில அளவிலான தரவரிசையில் 3-வது இடம் பெற்ற அழகப்பா பல்கலைக்கழகம்

## துணைவேந்தருக்கு கவர்னர் பாராட்டு சான்றிதழ்

காரைக்குடி, அக்.11-
இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட என்.ஐ.ஆர்.எப். இந்திய தரவரிசை 2025-ல் இந்தியாவில் உள்ள 1,300 மாநில பொது பல்கலைக்கழகங்களில் அகில இந்திய அளவில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 14-வது இடத்திலும் தமிழ்நாடு மாநில பல்கலைக்கழகங்களில் 3-வது இடத்தையும் பெற்றுள்ளது. இத்தரவரிசை கற்பித்தல், கற்பதற்கான வளங்கள், ஆராய்ச்சி, தொழில்முறை பயிற்சி, மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள், சர்வதேச வெளிப்பாடு, உள்கட்டமைப்பு வசதிகள், கருத்து கணிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த குறிப்பிடத்தக்க சாதனையை அங்கீகரிக்கும் வகையில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரவி மற்றும் என்.ஐ.ஆர்.எப். குழு உறுப்பினர்களுக்கு பாராட்டு சான்றிதழை சென்னை ராஜ்பவனில் நடைபெற்ற தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சிறந்து விளங்குவதற்கான மாநாட்டில் தமிழக கவர்னர் மற்றும் மாநில பல்கலைக்கழகங்களில் வேந்தர் ஆர்.என்.ரவி வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.




## 11-10-2025

தினகரன்

சர்க்கரை, மூட்டு வலி, கல்லீரல் பிரச்னையை மட்டுமல்ல....

# நுரையீரல் புற்றுநோயை அதலைக்காய் அழிக்கும்

## அழகப்பா பல்கலைக்கழக ஆய்வில் தகவல்




அதலைக்காய் தாவரம் மற்றும் மருந்துவ பண்புகளை விளக்கும் படம்.

காரைக்குடி, அக். 11: நுரையீரல் புற்றுநோயை அழிக்கும் திறன் அதலைக் காய்க்கு உள்ளது என அழகப்பா பல்கலைக்கழக ஆய்வு மூலம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் உலகிலேயே முதல்முறையாக அதலைக்காயின் மருத்துவ பண்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு பல முக்கிய ஆய்வு முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன என துறைத்தலைவர் ஜெயகாந்தன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

தமிழ் பாரம்பரிய மருத்துவத்தில் அதலைக்காய் சர்க்கரை, புற்றுநோய், மூட்டு வலி, கல்லீரல் மற்றும் பிற தொற்று நோய்களுக்கு மருந்தாக பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. ஆனால், இதன் மருத்துவ குணங்கள் குறித்த அறிவியல் ஆதாரங்கள் எதுவும் இதுவரை இல்லை. பாகற்காய் போல் சுவையுடைய இக்காய் கொடி வகை தாவரமாகும். தமிழ்நாட்டில் மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகாவில் அதிகமாக விளைகிறது. இதில் துத்தநாகம், வைட்டமின் சி, பாஸ்பரஸ் போன்ற நுண்சத்துகள் நிறைந்துள்ளன. உலகளவில் முதல் முறையாக அதலைக்காயின் மருத்துவ பண்புகள் குறித்து உயிரி தகவலியல் துறை சார்பில் ஆராய்ச்சி மாணவர்கள் இணைந்து கடந்த 3 ஆண்டுகளாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டோம்.



பேராசிரியர் ஜெயகாந்தன்.

இதன் இலை, காய் மற்றும் விதை திசுக்கள் நவீன தொழில்நுட்பத்தால் ஆர்என்ஏ பகுப்பாய்வு செய்யப்பட்டு முழுமையான ஜீன்களின் வெளிப்பாடு கண்டறியப்பட்டுள்ளது. ஆராய்ச்சி முடிவுகள் சர்வதேச அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் 4.5 லட்சத்திற்கும் அதிகமான மரபணுத் தொடர்புகள் உள்ளதாக கண்டறிந்துள்ளோம். மருத்துவத்துக்கு பயன்படும் சேர்மங்களை உருவாக்கும் பல முக்கிய ஜீன்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலை, காய்களில் அதிக மருத்துவ செயல்பாடுகள் உள்ளன. இரண்டாவது கட்டமாக இலை, காய், விதையை ஜிசிஎம்எஸ் தொழில்நுட்பத்தில் ஆய்வு செய்ததில் 45க்கும் மேற்பட்ட சிறிய மருத்துவ மூலக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன.

சிறுநீர் பாதைத் தொற்று, இருதய நோய், வைரஸ் காய்ச்சல் மற்றும் நாள்பட்ட நோய்களுக்கு நீண்ட காலமாக மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு பயோபிலிம் என்ற பாக்டீரியா அடுக்குகள் உருவாகி தொற்றுகளை அதிகப்படுத்தும். இதற்கு அதலைக்காயின் விதை சாற்றுடன் பல்வேறு உலோகங்களை சேர்த்து உலோக நானோ துகள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் செம்புடன் சேர்த்த உலோக நானோ துகள் பயோபிலிம் உருவாக்கிய எஸ்கேப் நோய்க் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டவையாக கண்டறியப்பட்டுள்ளது. நுரையீரல் புற்றுநோய் செல்களை அழிக்கும் திறனையும் வெளிப்படுத்தின. இந்த ஆராய்ச்சி முடிவுகள் புதிய மருந்துகள், வளர்சிதை மாற்றம் மற்றும் மூலக்கூறு இனப்பெருக்கம் போன்ற துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதலைக்காயின் மரபணு உலகளவில் இன்னும் ஆராயப்படாத பல பசுமை வளங்களை வெளிக்கொண்டு வரும்.

இவ்வாறு கூறினார்.

**29-09-2025**

தினகரன்

3/4

## அழகப்பா பல்கலையில்

# கேட்,ஜேஏஎம் தேர்வு விழிப்புணர்வு முகாம்




காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் துணைவேந்தர் ஜி.ரவி பேசினார்.

**காரைக்குடி, செப்.29:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உள்தர உறுதி அமைப்பு, அறிவியல் புல முதன்மையர் மற்றும் வேலைவாய்ப்பு பிரிவின் சார்பில் கேட் மற்றும் ஜெஏஎம் 2026 தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஜி.ரவி தலைமை வகித்து பேசுகையில், மாணவர்கள் கேட் மற்றும் ஜேஏஎம் தேர்வுகளில் வெற்றி பெற்று நல்ல கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பை கற்க வேண்டும். 2026ம் ஆண்டுக்கான கேட் தேர்வு கவுஹாத்தியிலும், ஜேஏஎம் தேர்வு மும்பை ஐஐடியும் வரும் பிப்ரவரி மாதம் நடத்தி மார்ச் மாதம் முடிவுகளை வெளியிடும்.இத்தேர்வுகளில் வெற்று பெறுவதன் மூலம் நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎஸ்சி மற்றும் என்ஐடி.யில் சேரலாம். இதன் மூலம் ஆராய்ச்சி நிதி உதவி, பயிற்சிகால நிதி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களான டிஆர்டிஓ, பெல் மற்றும் ஓஎன்ஜிசி போன்றவற்றில் வேலை வாய்ப்புகள் பெற முடியும். காரைக்குடியில் மத்திய மின் வேதியியல் நிறுவனம் இத்தேர்வுகளுக்கான தேர்வு மையமாக உள்ளது. இதனால் மாணவர்கள் வெளியூர்களுக்கு செல்ல வேண்டியது இல்லை என்றார்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கழகத்தின் இயற்பியல்துறை பேராசிரியர் சுதாகர் பயிற்றுனராக இருந்தார். பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளை சேர்ந்த 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**12-09-2025**

தினகரன்



### என்.ஐ.ஆர்.எப் தர வரிசையில்

# அழகப்பா பல்கலைக்கழகம் தமிழக அளவில் 3வது இடம்

## துணைவேந்தர் ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் சிறந்த இடத்தை பெற்றதற்கான சான்றினை துணைவேந்தர் ஜி.ரவியிடம் தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் வழங்கினார். உடன் பதிவாளர் செந்தில்ராஜன் உள்ளார்.

காரைக்குடி, செப். 12: தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்குள் 44வது இடம், தமிழ்நாடு அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) கடந்த 2016ம் ஆண்டு முதல் பல்கலைக்கழங்களுக்கு இடையேயான தரவரிசையை வெளியிட்டு வருகிறது. இதில் கற்பித்தல் மற்றும் கற்பதற்கான வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள், சர்வதேச வெளிப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதி, கருத்துக் கணிப்புகள் ஆகிய 5 குறிப்பிட்ட பகுதிகளின் மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. தவிர ஆராய்ச்சி வெளியீடுகள் அதிகமான மேற்கோள்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினர் 2025க்கான தரவுகளை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிர்வாக பிரிவுகளிடம் இருந்து சேகரித்து சமர்ப்பித்து இருந்தனர். தற்போது 2025ம் ஆண்டுக்கான வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்குள் இடையேயான என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப்பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழங்களுக்குள் 44வது இடம், மாநிலபொதுப் பல்கலைக்கழக தரவரிசையில் 14வது இடம், பொதுப்பிரிவில் 4045 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் 73வது இடத்தை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் இருந்து இந்திய உயர் கல்வி நிறுவன தரவரிசை, பல்கலைக்கழக தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 3வது இடத்தை பெற்றுள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள்ளும், பொதுப்பிரிவில் 100 இடங்களுக்குள்ளும் அழகப்பா பல்கலைக்கழகம் தரத்தை தக்க வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு தரவரிசையில் 14163 உயர் கல்வி நிறுவனங்கள் வெவ்வேறு பிரிவுகளில் கலந்து கொண்டன. தரவரிசையில் சிறந்த இடம் பெற செய்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மற்றும் முதுகலை மாணவர்கள், அலுவலர்களை பாராட்டுகிறோம் என்றார்.

**23-08-2025**



## மாணவர்களின் முன்னேற்றத்திற்காக

# புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்படுகிறது

### துணைவேந்தர் ஜி.ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையில், முதுகலை உயிரி வேதியியல் பாடப்பிரிவுக்கான வகுப்பறையை துணைவேந்தர் ஜி.ரவி திறந்து வைத்தார்.

**காரைக்குடி, ஆக.23:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையின் சார்பில் முதுகலை உயிரி வேதியியல் பாடப்பிரிவு துவக்கவிழா நடந்தது. விழாவில், பாடப்பிரிவின் ஒருங்கிணைப்பாளர் உதவி பேராசிரியர் பூமி வரவேற்றார். பதிவாளர் செந்தில்ராஜன் முன்னிலை வகித்தார். துணைவேந்தர் ஜி.ரவி தலைமை வகித்து துவக்கி வைத்து பேசியதாவது: உயிரி வேதியியல் பாடப்பிரிவு மிகச் சிறந்த பாடப்பிரிவாகும். இங்குள்ள அனைத்து ஆராய்ச்சி உபகரணங்களையும் துறை பாகுபாடு இன்றி அனைத்து மாணவர்களும் பயன்படுத்தி கொள்ளலாம். ஒவ்வொரு கல்வியாண்டிலும் மாணவர்கள் புதுமை புத்திகளை கையாண்டு வளர்ச்சி பாதையில் முன்னேறும் வகையில் புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்படுகிறது.

புதிய முதுகலை பாடப்பிரிவுகளான கணினி தடயவியல், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல், ஊட்டச்சத்து மற்றும் உணவு கட்டுப்பாடு. இந்த ஆண்டு உயிரிவேதியியல் மற்றும் பாலிமர் வேதியியல் பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளது என்றார்.

உயிரி தகவலியல் துறை தலைவர் மூத்த பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் பேசுகையில், தேசிய தர மதிப்பீட்டில் அதிக தரப்புள்ளிகளை பெற்று இரட்டை முறை அங்கீகாரம் பெற்று முதல் பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் உள்ளது. நவீன உள்கட்டமைப்பு ஆராய்ச்சி உபகரணங்கள், திறன் மேம்பாட்டுடன் கூடிய தொழில் முனைவு போன்ற வளர்ச்சி திட்டங்களையும், நிதி மேலாண்மையும், கழிவுநீர் சுத்திகரிப்பு, பசுமை வளாகத்தை உருவாக்குவது போன்ற எண்ணற்ற சாதனைகளை துணைவேந்தர் செய்துள்ளார் என்றார்.

**26-08-2025**



### அழகப்பா பல்கலையில்

# ரூ.5 கோடியில் புத்தாக்க மைய கட்டிடங்கள்

## முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்



▶ முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்த அழகப்பா பல்கலைக்கழக புத்தாக்க வளர்மைய கட்டிடத்தை துணைவேந்தர் ஜி.ரவி, எம்எல்ஏ மாங்குடி ஆகியோர் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

காரைக்குடி, ஆக.26: முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வழியாக காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் ரூ.2 கோடியில் கட்டப்பட்ட புத்தாக்க வளர் மையம், ரூ.3 கோடியில் அழகப்பா அரசு பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்ட தேர்வு கூடக் கட்டிடத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஜி.ரவி தலைமை வகித்தார். எம்எல்ஏ மாங்குடி குத்துவிளக்கு ஏற்றி மாணவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். பதிவாளர் முனைவர் செந்தில்ராஜன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் முனைவர் ஜெயகாந்தன், முனைவர் சேகர், முனைவர் ராஜாராம், தேர்வாணையர் முனைவர் ஜோதிபாசு, தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் கண்ணபிரான், ரூசா இயக்குநர் முனைவர் பாலமுருகன், திறன் மேம்பாட்டு மைய இயக்குநர் முனைவர் தர்மன், பல்கலைக்கழக பொறியாளர் பாலா, காங்கிரஸ் மாநகர தலைவர் சண்முகதாஸ் , நகர செயலாளர் குமரேசன், வர்த்தக காங்கிரஸ் நிர்வாகி ஜெயபிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் எம்எல்ஏ மாங்குடி பேசுகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

ஒவ்வொரு மாணவரும் கல்வியில் சிறந்த விளங்கி தமிழ் நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்பதே முதல்வரின் எண்ணம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத பல்வேறு சிறப்பான திட்டங்கள் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது. அரசு பள்ளிகளில், கல்லூரிகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் அழகப்பா பொறியியல் கல்லூரிகளில் ரூ 5 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்துள்ளார். அரசு பள்ளிகள் அனைத்து பெருமையின் அடையாளமா க மாறி உள்ளது. அரசு பள்ளி மாணவர்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர். அனைத்து வசதிகளுடன் கூடிய அரசு கல்வி நிறுவனங்களில் படிக்கிறோம் என்ற பெருமையுடன் மாணவர்கள் இருக்க வேண்டும் என்றார்.